# நன்றியுரை

"**ராஜம் கிருஷ்ணன், வல்சலா நாவல்களில் பாதிக்கப்பட்டோர் – ஓர் ஒப்பீட்டாய்வு**" என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை நிகழ்த்த இசைவு அளித்த கேரளப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் **முனைவர். என். பாபு** அவர்களுக்கும், ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கும், ஆய்வு நெறியாளர் **முனைவர். காஞ்சனா** அவர்களுக்கும் முதற்கண் என் நன்றி உரியது.

ஆய்வுத் தலைப்பினைக் கொடுத்து, ஆய்வு மேற்பார்வையாளராக அமைந்து, ஆக்கமும் ஊக்கமும் அளித்து, ஆய்வுக் கட்டுரைகள் உருவாகும் காலத்தில் தகுந்த வழிமுறைகளை வகுத்துக் கொடுத்தும், பல்லாற்றானும் ஊக்குவித்தும், ஒப்பீட்டுக் கருத்துக்களை கோர்வை செய்யும் உத்திகளை முறையாய்ப் புகட்டியும் உதவி புரிந்த என்னரும் தமிழ்ப் பேராசிரியை, ஆய்வு நெறியாளர் **முனைவர். காஞ்சனா** அவர்களுக்கு என் நன்றி என்றென்றும் உரியது.

ஆய்வுக் கருத்தரங்குகளில் கட்டுரைகள் படித்த போதெல்லாம், அவற்றை மெருகூட்டத் தேவையான ஆலோசனைகள் தந்தும் தம் கருத்துக்களைக் கூறியும் உதவிய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **முனைவர். சி. சுப்பிரமணியபிள்ளை** அவர்களுக்கும் என் நன்றி உரியது.

ஆய்வுக் கட்டுரைகள் உருவாகும் காலத்து, இருமொழி நாவலாசிரியர்களின் கருத்துக்களைக் குறித்து விமர்சித்தும் கட்டுரைகளின் அமைப்பிற்குத் தேவையான விளக்கங்கள் தந்தும் உதவிய பல்கலைக்கழகக் கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் **முனைவர். எம்.எம். மீரான் பிள்ளை** அவர்களுக்கும் என் நன்றி உரியது.

கேரளப் பல்கலைக்கழக மலையாளத்துறைப் பேராசிரியர்களான **முனைவர். டி. பெஞ்சமினும், முனைவர். என். முகுந்தனும்** மலையாள நாவல்கள் பற்றிக் கருத்துக்கள் கூறியதுடன் தமிழ் நாவல்களுடன் ஒப்பீடு செய்யவும் உதவி செய்தனர். இவ்விரு பேராசிரியர்களும் என் நன்றிக்குரியவர்கள்.

கருத்தரங்குகளில் ஆர்வத்துடன் பங்கேற்று விவாதங்கள் புரிந்து என்னைச் சிந்திக்க வைத்த உடன் ஆய்வு செய்த ஆய்வாளர்களும் என் நன்றிக்குரியவர்கள்.

ஆய்வுக் கட்டுரைகள் தயாரிப்பின் போது உதவிய ஆய்வாளர் **ஜான்ஸி** என் அன்பிற்குப் பாத்திரமானவர். அன்புக் கணவர் **வினோத்** என்றென்றும் என் வளர்ச்சியில் துணை நிற்பவர்.

ஆய்வு செய்த காலத்தே ஊக்கத்தொகை அளித்த கேரள அரசும் கேரளப் பல்கலைக்கழகமும் என் நன்றிக்குரியவை.

தேவையான நூல்களைத் தந்து உதவிய தமிழ்த்துறை நூலகர் **ரவிக்குமார்**, மலையாளத்துறை நூலகர் **ஜோஸ்** ஆகியோரும் நன்றிக்-குரியவர்கள்.

ஆய்வேட்டினைச் சீரிய முறையில் கணினி அச்சு செய்து தந்த **செல்வி. சி. அமுதா**வுக்கும், அழகுற கட்டமைத்துத் தந்த நாகர்கோவில் கண்ணன் கணினி நிறுவன உரிமையாளர் **திரு. அ.சுகுமாரன்** அவர்களுக்கும் என் நன்றி உரியது.

ஆய்வாளர்